# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035248

1. District மாவட்டம்: நீலகிரி  PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year ஆண்டு: 2018  FIR No. மு.த.அ. எண்: 03  Date நாள்: 25.10.2018

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 102 Cr.PC r/w

   (ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018

   (iii) Act சட்டம்: and Criminal Procedure Code.  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 31.08.2018 at 16.50 மணிக்கு முன்பு.

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.08.2018  Time : நேரம் 20.30 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  திசை 1 km. தென்மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  வட்டார போக்குவரத்து அலுவலகம், உதகமண்டலம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  G. பெருமாள்,  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்,  (g) Address : முகவரி 10ஆம் அலகு ஆய்வுக்குழு அலுவலகம். 10ஆம் அலகு தொழில்நுட்ப அலுவலகம், கோவை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. K. சந்திரகுமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (Grade-I), வட்டார போக்குவரத்து அலுவலகம், உதகமண்டலம் மற்றும் பிறர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   ( உரிய அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்வதால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/10/18 — 25/x/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.10.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1600 hrs.

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை ...................... No. எண் .........
காவல் ஆய்வாளர்
[illegible]

• GCP-240 34(Type 2) 90,000 Cps 21 3 10(HCL-12)p.2

ஊ.த.க. பிரிவு கு.எண்.3/2018/AC/NI வழக்கின் வரைவு முதல் தகவல் அறிக்கை: பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கடந்த 31.08.2018 ம் தேதி சுமார் 20.30 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது கோயமுத்தூர் மாவட்டம், ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.G.பேபி பாலா அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 31.08.2018-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் G.பேபி பாலா, மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், ஆட்சியர் அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். நாள்: 31.08.2018 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - நீலகிரி மாவட்டம் - வட்டார போக்குவரத்து அலுவலகம் - லஞ்சம் கோருவதாக புகார் - திடீர் தணிக்கை - நடவடிக்கை எடுத்தல் பற்றி. இன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம், உரிமம் புதுப்பித்தல், புதிய வாகனங்களை பதிவு செய்தல், தகுதிச் சான்று புதுப்பித்தல் மற்றும் இதர வட்டார போக்குவரத்து அலுவலக வேலைகளை செய்வதற்கு இடைத்தரகர்கள் மூலம் அரசு நிர்ணயித்த தொகைக்கு கூடுதலாக தொகைகளைப் பெற்று வட்டார போக்குவரத்து துறை அதிகாரிக்கும், மோட்டார் வாகன் ஆய்வாளர் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் லஞ்சமாக கொடுத்துவருவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் நான் உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் இன்று 31.08.2018-ம் தேதி மாலை 16.50 மணிக்கு மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டோம். தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த திரு.குமார் என்பவரிடமிருந்து பணம் ரூ.46,370/-ம் திரு.ஜெயகரன் என்பவரிடமிருந்து ரூ.36,340/-ம், திரு.ரவி என்பவரிடமிருந்து ரூ.5,560/-ம், திரு.பாபு என்பவரிடமிருந்து ரூ.26,730/-ம், திரு.ஜக்கரியா என்பவரிடமிருந்து ரூ.7,600/-ம், திரு.பிரகாஷ் என்பவர் இருந்த அறையிலிருந்து ரூ.39,470/-ம் மற்றும் திரு.சஜி என்பவரிடமிருந்து ரூ.42,910/-ம் ஆக மொத்தம் ரூ.2,04,980/-(ரூபாய் இரண்டு இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது. இதற்காக தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த

திடீர் தணிக்கை சம்மந்தமான அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். எனவே, உரிய நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் G.பேபி பாலா. Submitted Received the complaint along with proceedings and statement of Tr.Nandhu and submitted the same to DVAC, Chennai for necessary orders. ஒப்பம் B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊ.த.க.துறை, உதகமண்டலம். செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of Surprise Check conducted on 31.08.2018 between 16.50 hrs and 20.00 hrs at Regional Transport Office, Udhagamandalam, the Nilgiris. முன்னிலை: 1) திருமதி.G.பேபி பாலா, துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 31.08.2018-ஆம் தேதி கோயமுத்தூர் மாவட்டம், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி. G.பேபி பாலா ஆகிய நான், உதகமண்டலம் வட்டார போக்குவரத்து கழக அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம், உரிமம் புதுப்பித்தல், புதிய வாகனங்களை பதிவு செய்தல், தகுதிச் சான்று புதுப்பித்தல் மற்றும் இதர வட்டார போக்குவரத்து அலுவலக வேலைகளை செய்வதற்கு இடைத்தரகர்கள் மூலம் அரசு நிர்ணயித்த தொகைக்கு கூடுதலாக தொகைகளைப் பெற்று வட்டார போக்குவரத்து துறை அதிகாரிக்கும், மோட்டார் வாகன் ஆய்வாளர் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் லஞ்சமாக கொடுத்துவருவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், நானும் உதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் காவல்துறையினர் சகிதம் இன்று (31.08.2018) மாலை 16.50 மணிமுதல் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டோம். இந்த திடீர் தணிக்கையின் விபரம் பின்வருமாறு:- இந்த திடீர் தணிக்கை சகிதம் உதகமண்டலம், குன்னூர் சாலையில் அமைந்துள்ள உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் நுழைந்தபோது அது தரைதளம் மற்றும் முதல்தளம் கூடிய கட்டிடமாக இருந்தது. இந்த கட்டிடத்திற்குள் நுழைந்து முதலாவதாக உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்குள் நுழைந்தபோது தட்டச்சர் திரு.சக்திவேல் மற்றும் ஓட்டுநர் திரு.சாந்தகுமார் ஆகியோர் இருந்தனர். இவர்களில் சக்திவேல் என்பவரை காவலர் மூலமாக தணிக்கை செய்யச் சொல்ல அவர் தானாகவே தன்னுடைய இடது சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.6,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்றும், இன்று காலையில் சௌத் இந்தியன் வங்கி ஏடிஎம்லிருந்து

எடுத்ததாக சொன்னார். இதை உறுதி செய்ய தன்னுடைய செல்போனிலிருந்து வந்த மெசேஜை காண்பித்தார். இது சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.6,000/-மும் அவரிடமே கொடுக்கப்பட்டது. அடுத்ததாக ஓட்டுநர் திரு.சாந்தகுமார் என்பவரை விசாரணை செய்ய அவர் தன்னிடம் ரூ.3,950/-ஐ வைத்திருந்தார். அந்த பணம் ஆய்வறிக்கைக்கு செலுத்த வேண்டிய பணம் என்று சொன்னார். அதுபற்றி விசாரிக்க அது உண்மையாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே கொடுக்கப்பட்டது. அடுத்ததாக நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு நுழையும்போது அதன் முன்புறம் திரு.B.குமார் மற்றும் D.நந்து ஆகியோர் நின்றுக்கொண்டிருந்தனர். திரு.D.நந்து என்பவரை விசாரிக்க, அவர் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெற வந்ததாகவும், அதற்கான அரசு கட்டணம் ரூ.1,600/-ஐ தானே கட்டிவிட்டதாகவும், முன்பு தேர்வு செய்யும்போது இரண்டு சக்கர வாகனம் ஓட்டி காட்டிவிட்டதாகவும், நான்கு சக்கர வாகனம் உரிமம் பெற தேர்வு பெறவில்லையென்றும், எனவே இன்று மதியம் நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி காண்பித்து தேர்வு பெற்றதாகவும், இதற்கு உரிமம் பெற ரூ.4,000/- லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்று குமார் சொன்னதாகவும், இல்லையென்றால் ஓட்டுநர் உரிமம் கொடுக்காமல் இழுத்தடிப்பார்கள் என்றும், எனவே அதை கொடுத்தால் இன்றே வாங்கி கொள்ளலாம் என்று சொல்ல அதை நான் குமாரிடம் கொடுத்திருந்தேன் என்றும் உரிமத்தை இன்று சற்றுமுன் வாங்கிவிட்டதாகவும் சொன்னார். குமாரை விசாரிக்க நந்து கூறியதை ஒத்துக்கொண்டார். பின்னர் அவரை தணிக்கை செய்ய காவலரிடம் சொல்ல அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் இடதுபுற பின்பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.46,370/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதைப்பற்றி கேட்க அவர் முதலில் திரு.சத்தியகுமாருக்கு என்று சொல்லிவிட்டு பின்னர் எதுவும் பேசாமல் நின்றார். எனவே, அந்த பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்த்யகுமாருக்கு லஞ்சமாக கொடுப்பதற்கான பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக நான் மோட்டார் வாகன ஆய்வாளர் கிரேடு-1 திரு.கி.சத்தியகுமார் என்பவருடைய அறைக்கு செல்ல அவர் தன்னுடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அங்கு பின்னர் பெயர் கேட்டு தெரிந்த உதகமண்டலம் மனோஜ் ஓட்டுநர் பயிற்சி பள்ளியை சேர்ந்த திரு.வா.ஜக்கிரியா மற்றும் உதகமண்டலம் முருகன் டிராவல்ஸை சேர்ந்த திரு.கு.சஜி ஆகியோர் இருந்தனர். பின்னர் திரு.சத்தியகுமாரை காவலர் மூலமாக தணிக்கை செய்யச் சொல்ல அவர் தானாகவே அவரது சட்டையினுடைய இடது உள்பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த

பணம் என்பதால், அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் ஜக்கிரியா என்பவரை தணிக்கை செய்யச் சொல்ல அவராகவே முன்வந்து அவர் அணிந்திருந்த கருப்பு கலர் கோட்டின் வலதுபுற பாக்கெட்டில் பணம் ரூ.7,600/- இருந்ததை ஆஜர் செய்தார். அதுபற்றி கேட்க அவர் எந்த முகாந்திரமும் சொல்லவில்லை. எனவே, அந்த பணம் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக திரு.சஜி என்பவரை காவலரிடம் சொல்லி தணிக்கைச் செய்ய அவரிடம் அவர் அணிந்திருந்த கால்சட்டையின் இடது புற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.42,910/- இருந்தது. அதுபற்றி கேட்க முன்னுக்குப்பின் முரணாக சரியான முகாந்திரம் அளிக்காததால் அந்த பணம் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு எதிரே பிரகாஷ் இருந்த அறைக்குச்செல்ல அந்த அறையில் 2000 ரூபாய் நோட்டுக்கள், 500 ரூபாய் நோட்டுக்கள், 200 ரூபாய் நோட்டுக்கள், 100 ரூபாய் நோட்டுக்கள், 50 ரூபாய் நோட்டுக்கள், 20 ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 10 ரூபாய் நோட்டுக்கள் சிதறி கிடந்தது. இவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க பணம் ரூ.39,470/- இருந்தது. இதைப்பற்றி யாரும் உரிமை கோரவில்லை. எனவே அந்த பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் தரைதளத்தின் வராந்தாவில் நின்றுக்கொண்டிருந்த உதகமண்டலம் பிரண்ட்ஸ் டிரைவிங் ஸ்கூலை சேர்ந்த திரு.ரா.ஜெயகரண் என்பவரை காவலர் மூலம் சோதனை செய்யச் சொல்ல அவர் தானாகவே தனது பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.36,340/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் எந்த முகாந்திரமும் கூறவில்லை. எனவே, அந்த பணம் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மதிலோரம் நின்றுக்கொண்டிருந்த உதகமண்டலம் பிரண்ட்ஸ் டிரைவிங் ஸ்கூலை சேர்ந்த திரு.D.ரவி என்பவரை காவலர் மூலம் சோதனை செய்யச்சொல்ல அவர் தானாகவே தனது பின்புற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,560/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் எந்த முகாந்திரமும் கூறாததால், அந்த பணம் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக வாகனங்கள் நிறுத்திமிடத்தில் நின்றுக்கொண்டிருந்த கிரசண்ட் ரேஸ் அண்டு டிராவல்ஸைச் சேர்ந்த திரு.M.பாபு என்பவரை காவலர் மூலமாக தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது பேண்ட் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.26,730/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் முன்னுக்குப்பின் முரணாக சரியான முகாந்திரம் சொல்லவில்லை. எனவே, அந்த பணம் கைப்பற்றப்பட்ப்டது. அடுத்ததாக முதல் தளத்திற்கு படியேறி செல்ல அதன் நுழைவாயிலின் வலது பக்கமாக இருந்த கண்ணாடி அறையில் உதவியாளர் திரு.பி.பாண்டியன் என்பவரும், இளநிலை உதவியாளர் திரு.D.சுகுந்தன் என்பவரும்

இருந்தனர். இவர்களில் பாண்டியன் என்பவரை சோதனை செய்யச்சொல்ல அவர் தானாகவே அவருடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அது அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக திரு.சுகுந்தன் தன்னிடமிருந்த தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக, வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திருமதி.காஞ்சனாவினுடைய அறைக்கு செல்லப்பட்டது. அவரை விசாரிக்க அவரிடம் பணம் ரூ.250- இருந்ததை பர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இளநிலை உதவியாளர் திருமதி.சாவித்திரி இருக்கைக்குச் சென்று அவரிடம் விசாரிக்க அவர் தன்னிடம் பணம் ரூ.520/- இருந்ததை தன்னுடைய பர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக உதவியாளர் திரு.மு.மகேஷ்பாபு என்பவருடைய இருக்கைக்கு சென்று அவரை விசாரிக்க அவர் தன்னுடைய பேண்டின் இடதுபுற பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.910/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. எனவே, தகுந்த முகாந்திரம் சொல்லாத மேற்படி ரூ.2,04,980/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து என்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது இந்த வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் கன்னியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கையானது இன்று (31.08.2018) மாலை 16.50 மணிக்கு தொடங்கி 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் போது நீலகிரி மாவட்டம், கோத்தகிரி சக்கத்தாவைச் சேர்ந்த D.நந்து என்பவரை தனியாக அழைத்துச் சென்று மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் வாக்குமூலம் பெற்றார். இந்த நடவடிக்கையானது தலைமைக்காவலர் திரு.நா.சக்தி என்பவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த செயல்முறையில் திருமதி.G.பேபி பாலா, துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம். திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் மற்றும் திருமதி.கி.காஞ்சனா, வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்

ஆகியோர் ஒப்பமிடவேண்டும். மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணை மற்றும் இதர ஆவணங்களையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள அனுமதி கோரி சென்னை இயக்குநர் அவர்களுக்கு நான் அனுப்பி வைத்தேன். இன்று 25.10.2018-ம் தேதி காலை வழக்கு பதிவு செய்ய சென்னை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அனுமதி ஆணை எண் SC No.32128/2018/TDP/NI நாள்:11.10.2018-ன் படி நான் உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2018/AC/NI சட்ட பிரிவு 102 கு.வி.மு.ச r/w 7 of PC Act 2018-படி இன்று (25.10.2018) பகல் 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை, நந்து என்பவருடைய அசல் வாக்குமூலம் மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,04,980/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து என்பது மட்டும்) ஆகியவற்றை கனம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geethalakshmi
25/x/18

o/c (B.கீதாலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.